/நினைவூட்டு-01/

வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்

ந.க.எண்.317/ஆ2/2026 நாள்: .02.2026.

பொருள்: பள்ளிக்கல்வி-வேலூர் மாவட்டம்-சார்நிலைப்பணி-01.01.2026 நிலவரப்படி-அரசு/நகராட்சி உயர்/மேல்நிலைப் பள்ளிகளில் பணிபுரியும் உடற்கல்வி ஆசிரியர்கள் நிலையிலிருந்து உடற்கல்வி இயக்குநர் நிலை-2 ஆக பதவி உயர்வு வழங்க தகுதி வாய்ந்தவர்களின் கருத்துரு சமர்ப்பிக்க தெரிவித்தல்-சார்பு.

பார்வை:
1. தமிழ்நாடு பள்ளிக் கல்வி சார்நிலைப் பணி சிறப்பு விதிகள் வெளியிடப்பட்ட அரசாணை (நிலை) எண்.13 பள்ளிக் கல்வித் துறை நாள்: 30.01.2020.
2. அரசாணை (நிலை) எண்.20, மாற்றுத்திறனாளிகள் (DAP-3.2) நலத்துறை, நாள்: 20.06.2018.
3. அரசாணை (நிலை) எண்.06, மாற்றுத்திறனாளிகள் (DAP-3.2) நலத்துறை, நாள்: 21.06.2025.
4. தமிழ்நாடு பள்ளிக் கல்வி இணை இயக்குநரின் (பணியாளர் தொகுதி) செயல்முறைகள் ந.க.எண்.4035/சி5/இ2/2026 நாள்: .01.2026.
5. இவ்வலுவலக இதே எண்ணிட்ட செயல்முறைகள் நாள்: .01.2026.

-----

பார்வை(5)-இல் காணும் செயல்முறைகள் மூலம் தங்கள் கவனம் ஈர்க்கப்படுகிறது. பார்வை(4)-இல் காணும் பள்ளிக்கல்வி இணை இயக்குநரின் செயல்முறைகளில் தெரிவிக்கப்பட்டதை தொடர்ந்து, 01.01.2026 நிலவரப்படி 2005-ஆம் ஆண்டு வரை உடற்கல்வி ஆசிரியராகப் பணி நியமனம் பெற்று பள்ளிக்கல்வித் துறையின் கீழ் இயங்கும் வேலூர் மாவட்டத்தில் உள்ள அரசு/ நகரவை உயர்/மேல்நிலைப் பள்ளிகளில் பணிபுரியும் உடற்கல்வி ஆசிரியர்களுக்கு, உடற்கல்வி இயக்குநர் நிலை-2 ஆக பதவி உயர்வு வழங்கும் பொருட்டு பார்வை(5)-இல் காணும் இவ்வலுவலக செயல்முறைகளில் உள்ள குறிப்புகளை பின்பற்றி தற்காலிக(Temporary) உத்தேச பெயர் பட்டியலில் பெயர்களை சேர்க்க, உடற்கல்வி ஆசிரியர்களின் விவரங்களை படிவத்தில் பூர்த்தி செய்தும், உடன் கருத்துருக்களை 2 நகல்களிலும், பதவி உயர்வுக்கு எவரும் இல்லை எனில் **இன்மை அறிக்கையும்** 16.02.2026-ஆம் தேதி மதியம் 2 மணிக்குள் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலகத்தில் ஒப்படைக்குமாறு அனைத்து அரசு/நகரவை உயர்/மேல்நிலைப் பள்ளி தலைமையாசிரியர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது. பதவி உயர்வு உத்தேச பெயர் பட்டியலில் உடற்கல்வி ஆசிரியர்களின் பெயர் விடுப்பட்டால் சார்ந்த பள்ளி தலைமையாசிரியர்களே பொறுப்பேற்க நேரிடும் என திட்டவட்டமாக தெரிவிக்கப்படுகிறது.

முதன்மைக் கல்வி அலுவலர்
வேலூர்.

பெறுநர்

தலைமையாசிரியர்
அரசு/நகராட்சி உயர்/மேல்நிலைப் பள்ளி
வேலூர் மாவட்டம்.

Scanned with OKEN Scanner